# <u>குழித்துறை நகராட்சி</u>

## <u>குழித்துறை நகர்மன்றத்தில் 27-05-2020 புதன் கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்</u>

**<u>பொருள் எண். 1</u>**

குழித்துறை நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் அதிகமாக கூடும் பகுதிகளான அம்மா உணவகம், நம்ம கழிப்பறை, மனோ ஹோட்டல் முன்புறம், நகராட்சி சுகாதார நிலையம், நகராட்சி அலுவலக வரிவசூல் மையம் முன்புறம் ஆகிய இடங்களில் கைகளை சுத்தப்படுத்துவதற்கு Wash Basin அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.30,000/-ற்கு தயார் செய்யப்பட்டு, நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C. சுரேஷ் மூலம் பிரிவு 15-ன்கீழ் செய்து முடிக்கப்பட்டது. அவசர அவசியம் கருதி பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடப்பட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3514**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 2</u>**

குழித்துறை நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.ச. இராமசுந்தரமணி என்பவரால் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் குழித்துறை நகராட்சி ஆணையருக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்குகள் WP(MD)No.14133/2019, WP(MD)No.1027 of 2020, WP(MD)No.1522/2020 ஆகியவற்றிற்கு ஆணையாளர் சார்பில் நிதிமன்றத்தில் ஆஜராகிய வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.30,000/-

திரு.P. ஆதிமூலப்பாண்டியன், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3515**
**அனுமதிக்கலாம்**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் மீன்சந்தையினை 2018-2019 குத்தகைக்கு விடப்பட்டதில் எவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரததால் 01-02-2019 முதல் சோதனை அடிப்படையில் துறை மூலம் வசூல் செய்திட ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியதின் பெயரில் தக்கலை கூட்டுறவு அச்சகம் மூலம் மீன்சந்தைக்கு தேவையான டிக்கெட் கீழ்கண்டவாறு அச்சிடப்பட்டுள்ளது. அதற்கான தொகையினை கூட்டுறவு அச்சகத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

ரசீது ரூ.30/-க்கு Bill No.3099 to 3292 dated : 25-2-2019, 8-3-2019 = Rs. 10704
ரசீது ரூ.100/-க்கு Bill No.3099 dated : 25-2-2019 = Rs. 520

Rs. 30/-க்கு Total : Rs.10704
Rs.100/-க்கு Total : Rs. 520

----------------

மொத்தம் Rs.11224

-----------------

**நகர்மன்ற தீர்மான எண் : 3516**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சியில் நடத்தப்படும் 94-வது வாவுபலி பொருட்காட்சியில் அனைத்து இனங்களும் சேர்த்து குத்தகைக்கு விடப்பட்டுள்ளதால் காட்சி பொருட்கள் மற்றும் தொடக்கவிழா நிறைவுவிழா

ஆகியவைகள் நகராட்சியால் நடத்தப்பட்ட வகையில் காட்சி பொருட்களுக்கான சீட்டுகள் அச்சிட்ட வகையில் தக்கலை கூட்டுறவு அச்சகத்திற்கு 25000-ம் சீட்டுகள் அச்சிட்ட வகையில் ஆகமொத்தம் ரூ.3538/-ஐ வழங்குவதற்கான செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3517**

**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சப்பாத்து பாலம் பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள Cholorine Tank பழுதடைந்ததால் குடிநீர் அவசர அவசியம் கருதி ரூ.40,000/- மதிப்பீட்டில் Automatic Liquid Cholorination ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயச்சந்திரன் மூலம் பிரிவு 15-ன்கீழ் மேற்கொள்ளப்பட்டமைக்கும், அதற்கான செலவினம் குடிநீர் நிதியில் செலவிடப்பட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3518**

**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் A Block கடை எண்.13-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.R. ரமேஷ்குமார் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.R. ரமேஷ்குமார் | 2013-2014 | 13 A Block | 205000 | Page No.13 & 20 |

ந.க.எண்.188/2020/பி1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3519**
**அனுமதிக்கலாம்**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 95-வது வாவுபலி பொருட்காட்சி தொடர்பான மறுஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 31-03-2020-ம் நாளிட்ட தினகரன் பத்திரிகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விளம்பரம் செய்த வகையில் ரூ.14061/-ஐ Cal Publication என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
ந.க.எண்.490/2020/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3520**
**அனுமதிக்கலாம்**

**<u>பொருள் எண். 8</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தாமிரபரணி ஆற்றின் இரு கரைகளிலும் Read Water Treatment System அமைத்தல், சப்பாத்து நீரேற்று நிலையத்தை சுற்றிலும் இரும்பு கம்பிவேலி அமைத்தல், ஆற்றின் கரையோரத்தில் வண்ணக்கற்கள் கொண்டு தளம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.13.50 லட்சம்

மதிப்பீட்டில் மேற்கொள்ள 29-04-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.S. பாபு,<br>கீழ்குளத்தன்கரை,<br>மார்த்தாண்டம். | மதிப்பீட்டை விட 22.19% குறைவு |
| 2 | திரு.P. ஜெயச்சந்திரன்,<br>சாலியன்விளை,<br>வெட்டுவெந்நி. | மதிப்பீட்டை விட 14.58% குறைவு |
| 3 | திரு.D. ஜஸ்டின்குமார்,<br>குழித்துறை. | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 4 | திரு.D. பிறேம்குமார்,<br>குழித்துறை. | மதிப்பீட்டை விட 0.19% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.S. பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3521**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 9</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கிற்கு செல்லும் சாலை மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாக இருந்த காரணத்தினாலும், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாகவும், உரக்கிடங்கிற்கு குப்பைகளை கொட்டுவதற்கு செல்லும் வாகனங்களுக்கு இடையூறாகவுமிருந்த காரணத்தினாலும் மேற்படி சாலையினை சிமெண்டு காங்கிரீட் தளம்

அமைக்கவும் மழைநீர் வடிகால் அமைக்கவும் ரூ.9,90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.3104, நாள் 16-12-2019-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 30-01-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.R. சுரேஷ் ராஜ் என்பவர் 25.26% குறைவான மதிப்பீட்டில் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டதை நகர்மன்றத் தீர்மான எண்.3455, நாள் 25-02-2020-ன்படி மன்றம் அங்கீகரித்ததை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரருக்கு 12-03-2020 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி பகுதியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக பிரதான குழாய்கள் பதிக்கப்பட உள்ளதால் காங்கிரீட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டால் குடிநீர் குழாய்கள் பதிக்கும் போது சாலை சேதமடையும் என்பதை கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரையில் அறிவுறுத்தப்பட்டவாறு அப்பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்திடவும் மேற்கண்ட காங்கிரீட் தளம் அமைக்கும் பணிக்கு 25.26% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.R. சுரேஷ் ராஜ் ஒப்பந்ததாரர் மூலம் அதே மதிப்பீட்டு தொகைக்குள்ளாக பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

குடிநீர் குழாய் பதிக்கப்படுவதால் சாலை சேதமடையும் என்பதை கருத்தில் கொண்டு பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவும், திரு.R. சுரேஷ் ராஜ் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண் : 3522**

**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 10</u>**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன்கீழ் ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் மார்த்தாண்டம் காந்தி மைதானத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயோ டாய்லெட் (Fixing of Bio Toilet Treatment System with Cabin Unit) அமைக்கும் பணி மேற்கொள்ள 19-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | Shree Bommu Industries, Coimbatore | மதிப்பீட்டை விட 4.13% அதிகம் |
| 2 | Sri Sai Recycle Solutions, Madurai | மதிப்பீட்டை விட 0.004% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 Sri Sai Recycle Solutions, Madurai நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3523**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>**பொருள் எண். 11**</u>

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020 மற்றும் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (ந.க.எண்.482/2020/இ1, நாள் 8-4-2020) தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ESS ESS Publication நிறுவனத்திற்கு ரூ.16800/- வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது.
(Bill No.A/ADVT/APR 2020/267) (Bill Date 16-04-2020) மேற்படி பட்டியல் தொகை ரூ.16800/- வருவாய் நிதியிலிருந்து ESS ESS Publication-க்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3524**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 12</u>**

குழித்துறை நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 5-4-2020 மற்றும் 11-04-2020 ஆகிய தினங்களில் தினமுரசு பத்திரிகை மற்றும் மாலை மலர் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

தினமுரசு பத்திரிகை - ரூ.9975
மாலைமலர் பத்திரிகை - ரூ.5796

**நகர்மன்ற தீர்மான எண் : 3525**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 13</u>**

குழித்துறை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் பழுதடைந்துள்ள சமையல் அறை இயந்திரங்கள் மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்யும் பணி ரூ.3.20 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 19-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.C. சுரேஷ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| 2 | திரு.S. பாபு | மதிப்பீட்டை விட 1.74% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.C. சுரேஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3526**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 14</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 மற்றும் 18-ல் பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை மாற்றி புதிதாக PVC பைப் அமைக்கும் பணி மற்றும் குழாய்கள் மாற்றியமைக்கப்பட்ட பகுதியில் காங்கீரீட் தளம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.6.75 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 19-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயச்சந்திரன் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 2 | திரு.A. ஆன்றணி (கண்ணக்கோடு) | மதிப்பீட்டை விட 0.24% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.P. ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3527**

**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 15</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் பண்ணியணி பகுதியில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் புதிதாக செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்திற்கு செப்டிக் டேங்க், குடிநீர் வசதி செய்தல், கட்டிடத்தின் மேல்பகுதியில் Weathering Course with pressed Tiles அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.1.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 19-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.S. பாபு | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 2 | திரு.C. சுரேஷ் | மதிப்பீட்டை விட 0.31% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.S. பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3528**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 16**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75AL.6196-க்கு free Service செய்யவும், இதர பணிகள் மேற்கொள்ளவும் Devik Mahindra நிறுவனம் திருநெல்வேலி மூலம் ரூ.6058/-க்கான விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3529**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 17**

குழித்துறை நகராட்சியின் பராமரிப்பில் உள்ள மார்த்தாண்டம் தினசரி சந்தையில் சேகரமாகும் கழிவுகளை சந்தையின் உள்பகுதியில் கொட்டப்பட்ட நிலையில் கொரோனா நோய் தொற்று பரவிய சூழ்நிலையில் கழிவுகளை உடனடியாக அப்புறப்படுத்தி தேவையான நடவடிக்கை மேற்கொள்ள காவல்துறை ஆய்வாளர் நேரில் தெரிவிக்கப்பட்டதனடிப்படையிலும் பேருந்து நிலையத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள காய்கறி கடைகள், பழக்கடைகளில் சேகரமாகி வரும் கழிவுகளை அப்புறப்படுத்தி பொது மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வகையில் திரு.எம். கிறிஸ்துராஜ் என்பவர் டிப்பர் மற்றும் JCB இயந்திரம் மூலம் அப்புறப்படுத்திய வகையில் ரூ.1,03,850/-க்

கான செலவு பட்டியல் பெறப்பட்டுள்ளது. தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மேற்படி பணி மிக மிக அத்தியாவசியமாக உள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை செய்தமைக்கு தொகையினை வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3530**

**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு. எஸ். மூர்த்தி
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.